KEMENTERIAN SUMBER MANUSIA

# “KERATAN AKHBAR KESUMA”

## AHAD
## 21 Disember 2025

| | |
|---|---|
| **Akhbar** | **Makkal Osai** |
| **Tarikh** | **21 December 2025** |
| **Ruang** | **Nation** |
| **Muka Surat** | **3** |



# தமிழ் பேசும் அமைச்சரைத் தந்திருக்கிறார் பிரதமர் அன்வார்

**தமிழ்பேசும் ஒரு முழு அமைச்சர் பதவி இந்திய சமுதாயத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு செவி சாய்த்து மிக அண்மைய அமைச்சரவை மாற்றத்தில் தமிழ் பேசும் டத்தோஸ்ரீ ரமணன் ராமகிருஷ்ணனை மனிதவள அமைச்சராக பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தந்திருக்கிறார்.**



இது மலேசிய இந்திய சமுதாயத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் பிரதமரின் உயரிய மாண்பினைப் பிரதிபலிக்கிறது. சுங்கை பூலோ நாடாளுமன்ற உறுப்பினரான டத்தோஸ்ரீ ரமணன், பிகேஆர் தேசிய உதவித் தலைவரும் மஇகா முன்னோடித் தலைவர்களில் ஒருவரான டான்ஸ்ரீ தேவகி கிருஷ்ணனின் பேரனும் ஆவார்.

இதற்கு முன்னதாக தொழில் முனைவோர், கூட்டுறவுத்துறை துணையமைச்சராக இருந்தபோது 471.5 மில்லியன் ரிங்கிட் கடனுதவியை இந்தியத் தொழில் முனைவோர் முன்னேற்றத்திற்கு பெற்றுத் தந்திருக்கிறார். இதன்வழி 20,000த்திற்கும் அதிகமான புதிய இந்தியத் தொழில் முனைவோர் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர். அதேசமயம், இந்தியக் கூட்டுறவுக் கழகங்களுக்கு புத்துயிர் அளித்தவர் டத்தோஸ்ரீ ரமணன்.

மனிதவள அமைச்சராக நியமனம் செய்யப்பட்டு அமைச்சரவையில் இந்திய சமுதாயத்தின் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றிருக்கும் அவர், தமக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பு மிகப் பெரியது. தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி மலேசியாவின் ஒட்டுமொத்த மக்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமை தன்மீது வைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையின் பிரதிபலிப்பு என்று குறிப்பிடுகிறார்.

நாட்டில் பல லட்சம் தொழிலாளர்கள், முதலாளிகள் அவர்களின் குடும்பங்கள் வாழ்க்கையில் வளத்திற்கு அச்சாரம் இடும் ஓர் அமைச்சரகமாக மனித வள அமைச்சு திகழ்கிறது. அமைச்சின் ஒவ்வொரு கொள்கையும் முடிவும் ஒட்டுமொத்த ரீதியில் நியாயமாகவும் அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை அளிக்கக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்வது தம்முடைய முன்னுரிமைகளில் ஒன்றாக இருக்கும் என்று டத்தோஸ்ரீ ரமணன் தெரிவித்தார்.

அமைச்சரவையில் இந்திய சமுதாயத்தின் பிரதிநிதி என்ற முறையில் மடானி அரசாங்க நிர்வாகத்தின் கீழ் அனைத்து இனத்தவர்களின் குரலாக ஒலிக்கும் கடப்பாடும் தமக்கு உள்ளது என்ற அவர், தம்மீது நம்பிக்கை வைத்து இந்த மிகப்பெரிய பொறுப்பினை வழங்கியிருக்கும் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமிற்கு நன்றிக்கடன் பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மலேசியரும் குறிப்பாக குறைந்த, நடுத்தர வருமானம் பெறும் தொழிலாளர் தரப்பினருக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கு நியாயமான வாய்ப்புகள் வழங்கப்படுவதில் தாம் உறுதியாக இருப்பதாக அவர் மேலும் சொன்னார்.



நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய தகுதிமிக்க மனிதவளத்தை உருவாக் கும் வகையில் மனிதவள அமைச்சை உருமாற்றம் செய்வதும் தம்முடைய முக்கிய இலக்குகளில் ஒன்று என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

உயர் திறன் கொண்ட - போட்டித் தன்மை மிக்க தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையிலான ஒரு புதிய தொழிலாளர் சமுதாயம் உருவாக்கப்படும்.

அதேசமயம், உலகளாவிய பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப அனைத்துத் துறைகளிலும் போட்டி தரக்கூடிய மனித சக்தியை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தப்படும் என்று டத்தோஸ்ரீ ரமணன் கூறினார்.

அதேவேளையில், உருவாக்கப்படும் ஒவ்வொரு வேலை வாய்ப்பும் நியாயமான சம்பளம், கௌரவம், போதுமான சமூகப் பாதுகாப்பு, பாதுகாப்புமிக்க பணியிட சுற்றுச்சூழல் ஆகியவற்றை உறுதி செய்வதிலும் அமைச்சு அதீத கவனம் செலுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

இவை அனைத்தும் மக்களின் நல்வாழ்வு, சமூக நீதி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை வலியுறுத்தும் மடானி பொருளாதாரக் கட்டமைப்புக்கு ஏற்ப இருக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

மனித வள அமைச்சு மிகச் சிறந்த வியூகத்துடனும் உயர் தாக்கத்தைத் தரக்கூடிய வகையிலும் செயல்படும் வகையில் அதன் கொள்கைகள் உருவாக்கப்பட்டு அமல்படுத்தப் பட்டு கண்காணிக்கப்படுவதிலும் தம்முடைய கவனம் இருக்கும். அமைச்சின் கீழ் செயல்படும் அனைத்து ஏஜென்சிகளும் வேலைச் சந்தைக்கு ஏற்ற மனித வளத்தை உருவாக்குவதில் அடிப் படை அம்சங்களைப் பின்பற்றுவதும் உறுதிசெய் யப்படும் என்று டத்தோஸ்ரீ ரமணன் குறிப்பிட்டார்.

மேலும் முதலாளிகள், தொழிற்சங்கங்கள், தொழில்துறை, பயிற்சி மையங்கள், பொதுமக் கள் ஆகியோரிடையிலான உறவுகளை மிக அணுக்கமாகக் கொண்டு வருவதற்கு அதிகமான அளவில் சந்திப்புகள் நடத்தப்படுவதிலும் தம்மு டைய கவனம் இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நடப்பு மனிதவளத் துறையில் எதிர்நோக்கப் படும் சவால்களுக்கு மிக அர்த்தமுள்ள விரை வான நடவடிக்கையை மேற்கொள்வதிலும் அமைச்சு பாடுபடும். வேலையின்மை, குறைந்த சம்பளம், குறைந்த திறன் ஆகியவற்றை ஒருங் கிணைந்த நடவடிக்கைகள் வழி கையாளப்படு வதிலும் அக்கறையும் கவனமும் செலுத்தப்படும் என்று டத்தோஸ்ரீ ரமணன் கூறினார்.